இரத்த ராத்திரி

1990 - 2005



2157

15ஆம் ஆண்டு சுஹுதாக்கள் தின நினைவு மலர்

வெளியீடு:
03ஆகஸ்ட்
2005

புத்தக வடிவமைப்பு
மபாஸ் முஹைதீன்
Datasoft Informatics
Kattankudi.
வடிவமைப்பு உதவி
மதியன்பன்
அச்சிட்டோர்:
Digital Advertising
Kattankudi.

தொடர்புகளுக்கு:
முஸ்லிம்தேச சுஹுதாக்கள்
ஞாபகார்த்த நிறுவனம்
காத்தான்குடி.

உள்ளே....
ஒரு வரலாற்றின் வாசல்படி
பக்கம்:02
பாடல்
பக்கம்:03
காத்தான்குடி-ஏறாவூர்...
பக்கம்:04
காட்டுமிராண்டித்தனங்கள்
பக்கம்:09
நினைவு
பக்கம்:10
ஈர நினைவுகள்....
பக்கம்:11
எங்கே அந்த டாக்டர்?
பக்கம்:16
நரவேட்டை
பக்கம்:17
ஏறாவூர் படுகொலைக்கு...
பக்கம்:19
நீங்கள் மறந்த நாள்...
பக்கம்:22
இரத்த ராத்திரி....
பக்கம்:24

இவை அனைத்தும்
முஸ்லிம்களின்
அடக்கமுடியாத
அழுகுரல்.....

ஒரு வரலாற்றின் வரசல்படி

முஸ்லிம்கள் மீதான இனப்படுகொலைகள். இனச்சுத்திகரிப்பு. கடத்தல். பொருளாதாரத்தை நாசப்படுத்தல் போன்ற இன்னோரன்ன சம்பவங்கள் திட்டமிட்டு நடாத்தப்படுவது இன்று நேற்று புதிதல்ல.

உலகவரலாற்றில் இபபடியான சம்பவங்கள் ஏராளமாகவும் மிகத்தாராளமாகவும் இடம்பெற்றிருக்கின்றன.இதன் தொடராகத்தான் 1990 ஆம் ஆண்டு காத்தான்குடியின் இரண்டு பள்ளிவாயல்களில் இஸாத் தொழுகையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த அப்பாவி முஸ்லிம்கள்மீது ஆயுதம்தரித்த தமிழ்க்குழு ஒன்றினால் காட்டுமிராண்டித்தனமாக வேட்டுக்கள் தீர்க்கப்பட்டது.

இத்தாக்குதல் காரணமாக ஸ்தலத்தில் 103 முஸ்லிம்களும் பின்னர் படிப்படியாக பல முஸ்லிம்களும் கொல்லப்பட்டு சஹீதாக்கப்பட்டனர். இதனைப்போன்றுதான் அந்தக்காலப்பகுதியில் குருக்கள் மடத்தில் பலர் கடத்தப்பட்டும் ஏறாவூ ரில் பலர் வெட்டப்பட்டும் சஹீதாக்கப்பட்டனர்.

இப்படியான துயரமான சம்பவங்கள் நடைபெற்று இன்றோடு 15 வருடங்கள் ஆகின்றன. இதை நினைவு கூறுவதே இந்த சிறிய நூலின் நோக்கமாகும். இது வெறும் ஞபகார்த்த நூலல்ல. புண்பட்டு புண்பட்டு பண்பட்டுப்போன ஒவ்வொரு தன்மானமுள்ள முஸ்லிமுக்கும் படிப்பினைதரும் நூலாகும்.

இதனை குறுகிய காலத்தில் வெளிக்கொணர உதவிய அனைத்து இஸ்லாமிய சகோதரர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

முஸ்லிம் தேச சுஹதாக்கள் ஞாபகார்த்த நிறுவனம்
காத்தான்குடி
2005.08.03.

மெட்டு- என்மன வானில் சிறகு விரிக்கும்..

2157

தொண்ணூறாம் ஆண்டு பள்ளியில் நடந்த
படு கொலைச் சம்பவமே!
இந்தச் சம்பவம் கோட்டால் உங்கள் இதயமும்
ஒரு கணம் நின்று விடும்!
பட பட பட வென துப்பாக்கி வேட்டுக்கள்
ஒலித்து ஓய்ந்தனவே...!
இந்த வேட்டுக்குள் மாட்டிய நம்மவர் அங்கே
துடித்து இறந்தனரே...
இரவுத் தொழுகை இஷாவினை முடித்திட
பள்ளியில் கூடி நின்றோர்
தலையினைத் தாழ்தி சுஜூதினைச் செய்திட
வேட்டுக்கள் தீர்த்தனரே..
பல குண்டு வீழ்ந்ததே...! உடலும் சரிந்ததே
இதயம் தாங்குமோ நீ கூறு...

(தொண்ணூறாம்)

பள்ளியில் ரெத்த வெள்ளம் பதறின பலரின் உள்ளம் -
வெளியினில் இதை யாரும் அறியாரே...
வீழ்ந்தவர் கலிமாச் சொன்னார் எழுந்தவர் உதவிகள் என்றார்!
எதிரிகள் இதை அறிய மறைந்தாரே..
ஊரவர் ஓடியே வந்தார்! உடனடி உதவிகள் தந்தார்!
எதற்கும் அவர் அஞ்சிட வில்லை அங்கே...
காயப்பட்டோர் அள்ளப் பட்டார்
கண்ணைத் தானே மூடிக் கொண்டார்
கல் நெஞ்சும் கரைந்து போகும் ஊரெங்கும் ஓலம்..!

(தொண்ணூறாம்)

சின்னவர் பெரியவர் என்று சிதறிய உடல்கள் அங்கு
நூற்றையும் அவை தாண்டிப் போயாச்சி
உறவினர் வந்து அங்கே ஒதுங்கிய உடல்கள் கண்டு
பதறிய காட்சி இன்னும் படமாச்சி.
பள்ளிகள் இரண்டுக்குள்ளே படுகொலை முடிந்து போச்சி
சொர்க்கம் அவர் வாழ்ந்திடும் இல்லம் அங்கே
காயப்பட்டோர் இன்னும் உள்ளார்
கருனையுள்ளோர் உதவியுள்ளார்
இளநெஞ்சும் புரிந்திட வேண்டும் வரலாற்றுச்சோகம்.

(தொண்ணூறாம்)

பாடலாக்கம்: மதியன்பன்.

காத்தான்குடி ஏறாவூர் இன அழிப்பின் நினைவுகள்....

காத்தான்குடி ஏறாவூர் இனப் படு கொலைகளின் 15 வருட துயர நினைவுகள் ஆகஸ்ட் முதலாம் இரண்டாம் வாரங்களில் நினைவு கூரப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம்கள் செறிந்து வாழும் ஏறாவூர் காத்தான்குடி பகுதிகள் 1990 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் பாரிய மையவாடிகள் போன்றே காட்சியளித்தன. எங்கும் மரண வீடுகள். பள்ளி வாசல்களில், வீடுகளில், தெருக்களில் எங்கும் இரத்த வெள்ளம். தாயை தந்தையை கணவனை மனைவியை பிள்ளையை சகோதரனை சகோதரியை இன்னும் உற்றார் உறவினரை இழந்தோரின் சோகக்குரல்கள். புலிப் பயங்கரவாதிகளின் மனித வேட்டைக்கு இலக்காகி அவர்களது கோரப்பிடியிலிருந்து தப்பி குற்றுயிராய்க் கிடந்தோரின் துயர ஓலங்கள் எல்லாம் இவ்விரு ஊர்களையும் கடந்த 1990 ஆண்டு வாட்டி வதைத்தன. அரசியல் மயக்க வார்த்தைகளில் முஸ்லிம்களும் தமிழர்களே, முஸ்லிம்களும் தமிழர்களும் தேங்காய்ப்பூவும் பிட்டும்போல ஒர சிறுபாண்மையினரின் உரிமைக்காகப்போராடும் புலிகள் இன்னொரு சிறுபாண்மையினரான முஸ்லிம்களின் உரிமைகளைப் பறிக்கமாட்டார்கள் என்ற பசப்பு வார்த்தைகளை ஒரு புறம் பேசிக் கொண்டே மறுபுறம் முஸ்லிம்கள் மீதான அடடுழியங்களையும் புலிகள் செய்து கொண்டு வருகிறார்கள்.

1990 ஆம் ஆண்டு மட்டும்தான் புலிகள் முஸ்லிம்கள் மீதான இன அழிப்பை மேற்கொண்டார்கள் என்பதல்ல உண்மை. வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமது பூர்வீகப் பூமிகளிலிருந்து முஸ்லிம்களை விரட்டியடிப்பதிலும் முஸ்லிம்களை இனஅழிப்பு செய்வதிலும் புலிகள் 1985 ஆம் ஆண்டிலிருந்து ஈடுபட்டு வருகிறார்கள்.

இரத்த ராத்திரி

மாதம் 03ம் திகதி மட்டக்களப்பு காத்தான்குடி மீராஜும்மா பள்ளி வாசலிலும் காத்தான்குடி ஹுஸைனியா தைக்காவிலும் இஸாத் தொழுகையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஆறு வயது பாலகன் தொடக்கம் 72 வயது முதியவர் வரை 103 பேர் படுகொலை செய்யப்பட்டார்கள். இன்னும் நூற்றுக்கணக்கானோர் புலிகளின் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தார்கள்.

இந்தச் சம்பவம் நடந்து ஒரு வார காலத்தில் ஆகஸ்ட் 11ஆம் திகதி நள்ளிரவுக்கு சற்று முன்னர் காத்தான்குடியிலிருந்து வடக்கே 16 மைல் தொலைவிலள்ள ஏறாவூரில் புலிகள் தமது இனப்படுகொலையை வெற்றிகரமாக நடத்தி முடித்தனர்.

இஸாத் தொழுகையை முடித்துவிட்டு உறங்கிக்கொண்டிருந்தபோது சுட்டும் வெட்டியும் 126 முஸ்லிம்களை கொன்றொழித்தனர். இந்தச் சம்பவத்தில் கற்பிணித் தாயையும் வெட்டிக் கொன்றுவிட்டு தமது இனவெறி அடங்காததால் அந்த கற்பிணித்தாயின் வயிற்றை கீறிப் பிழந்து சிசுவை வெளியே எடுத்து அம்மிக் கல்லில் வைத்து சிசுவை நசக்கிக் கொன்று தமது வெறியைத் தீர்த்துக் கொண்டனர்.

ஒட்டு மொத்தமாக ஒரே இரவில் நூற்றுக்கணக்கான முஸ்லிம்களை புலிகள் படுகொலை செய்ததால் ஏறாவூர் காத்தான்குடிச் சம்பவங்கள் உலக அளவில் எல்லோராலும் பேசப்பட்டன. தமிழர் உரிமைப் போராட்டத்தின் விளைவாக புலிகள் மேற்கொண்டுவரும் இன அழிப்பில் இதுவரை 7000 த்திற்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் அழிக்கப்பட்டுள்ளார்கள்.

காத்தான்குடி பள்ளிவாயல்கள் படுகொலையே புலிகள் மேற்கொண்ட முதலாவது பள்ளிவாயல் படுகொலை அல்ல. 1985 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 7ஆம் திகதி மன்னார் மாவட்டத்திலுள்ள அளவக்கை பகுதியில் பள்ளிவாசலில் இஸாத் தொழுகையில் ஈடுபட்டிருந்த 6 பேர்

ஸலாம் கொடுத்தத் திரும்பவதற்கிடையில் புலிகளால் ஈவிரக்கமின்றி படுகொலை செய்யப்பட்டடார்கள். இவர்கள் அனைவரும் ஊரின் முக்கியஸ்தர்கள்.

1985 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19ஆம் திகதி கிழக்குமாகாண மட்டக்களப்பு கறுவாச்சோலையில் 8 முஸ்லிம் விவசாயிகள் வெட்டப்பட்டு அவர்களது ஆணுறுப்புக்கள் வாய்க்குள் திணிக்கப்பட்ட நிலையில் தண்ணீருக்குள் போடப்பட்டுக் கிடந்தார்கள்.

1985 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தமது பாரம்பரிய பூர்வீகக் கிராமங்களில் வாழ்ந்து வந்த ஆயிரக்கணக்கான முஸ்லிம் விவசாயக் குடும்பங்கள் புலிகளால் விரட்டப்பட்டு சுமார் 20 வருடங்கள் கடந்து விட்ட நிலையிலும் இன்றுவரை அவர்கள் அகதிகளாகவே அல்லல் படுகிறார்கள்.

ஹஜ் யாத்திரையை முடித்துக் கொண்டு கல்முனை மட்டக்களப்பு வீதி வழியாக வந்துகொண்டிருந்த ஹாஜிகளும் அவர்களது உறவினர்களும் குருக்கள் மடத்தில் வைத்து வழிமறித்து புலிகளால் படுகொலை செய்யப்பட்டார்கள்.

1990 ஆம் ஆண்டு கிளி நொச்சி முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் இருந்து பூர்வீகமாக வாழ்ந்து வந்த அனைத்து முஸ்லிம்களும் புலிகளால் விரட்டியடிக்கப் பட்டார்கள். அதே ஆண்டில் கிழக்கு மாகாணத்தில் புலிகள் ஆங்காங்கே படுகொலை, ஆட்கடத்தல்கள், சொத்தழிப்புக்கள் என்பவற்றை மேற்கொண்டதோடு கிழக்கு மாகாணத்தில் தமது கட்டுப்பாட்டுப் பகுதியில் காலாகாலமாக வாழ்ந்த முஸ்லிம்களையும் விரட்டியடித்தார்கள்.

1991 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26 ஆம் திகதி பொத்துவில் பெரிய குளம் என்னும் அடர்ந்த காட்டுப் பகுதியில் வைத்து வாகனத்தை வழிமறித்து பெற்றோல் ஊற்றி தீயிட்டுக் கொழுத்தியதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், மகள், மருமகன் ஆகியோர் கருகி மாண்டனர்.

பள்ளிவாயல் படுகொலையின் மூலம் கொன்றொழிகப்பட்ட ஒருசில நூறு முஸ்லிம்களை விட ஏனைய 6000 த்துக்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் புலிகள் மறைமுகமாகவும்.நேரடியாகவும் சிறிது சிறிதாக நடத்தும் வன்முறைகள் மூலமே கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

2002 இல் ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கும் புலிகளுக்குமிடையே போர் நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. றவூப் ஹக்கீமும் பிரபாகரனோடு கூட்டறிக்கையொன்றில் கைச்சாத்திட்டார். ஆனால் கையொப்பமிட்ட மை காய்வதற்கு முன்னரே புலிகள் கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் மீது நேரடியாகவே தாக்குதல்களை மேற்கொள்ளத் தொடங்கினர்.



மூதூர், தோப்பூர், வாழைச்சேனை போன்ற பகுதிகள் எரிந்து சாம்பலாயின. கோடிக்கணக்கான ருபாய்கள் பெறுமதியான பொருளாதாரம் அழித் தொழிக்கப்பட்டது. பல முஸ்லிம்கள் படுகொலை செய்யப் பட்டார்கள். தொடர்ந்து புலிகளினால் மேற்கொள்ளப்படும் தாக்குதல்களினால் முஸ்லிம்கள் பெரும் இழப்புக்களை சந்தித்து வருகின்றனர். முஸ்லிம்களின் இருப்புக்கு அச்சுறுத்தலையும் பொருளாதாரர வீழ்ச்சியையும் ஏற்படுத்தும் வகையில் திட்டமிட்ட வகையில் புலிகளின் செயற்பாடுகள் தொடர்ந்த வண்ணமுள்ளன.

ஏறாவூர் பிரதேசத்தைப் பொறுத்த வரையில் இந்த ஊர் மக்களின் பொருளாதாரம் 90 வீதம் முற்றுமுழுதாக விவசாயத்தையே நம்பியுள்ளது.

ஆனால் ஏறாவூர் முஸ்லிம் விவசாயிகளுக்குச் சொந்தமான 25.000 ஏக்கருக்கு மேற்பட்ட காணிகள் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள தமிழ்ப் பிரதேசங்களில் அமைந்துள்ளன.

கடந்த 15 வருடங்களாக முஸ்லிம்களால் இக்காணிகள் செய்கை பண்ண முடியாதவாறு தடுக்கப் பட்டுள்ளன. இந்தக் காணிகள் அனைத்தும் புலிகளால் அனுமதிக்கப்பட்ட ஒருசில தமிழ் மக்களால் செய்கை பண்ணப்படுகின்றன.

ஒருவனைக் கொன்றொழிப்பதை விட அவனை தொழில் செய்ய விடாது தடுப்பது மிகக் கொடுமையானதாகும். அந்த வகையில் ஏறாவூர் காத்தான்குடியைச் சேர்ந்த விவசாயிகள் கைகள் கால்கள் கட்டப்பட்டு எங்குமே நகர விடாமல் தடுக்கப் பட்டநிலையிலும் சொல்லொன்னாத் துயரங்களோடு வாழ்ந்து வருகின்றார்கள்.

அரசும் அரசியல் வாதிகளும் கூட கடந்த 15 வருடங்களாக தமது தொழில் களையும் வசிப்பிடங்களையும் இழந்து பாதிக்கப்பட்ட முஸ்லிம்கள் விடயத்தில் போதிய அக்கறை காட்டவில்லை என்று குறைகூறப் படுகின்றது.



பாஸிஸவாதிகளின் காட்டுமிரான்டித்தனங்களில் சில.....

17.11.1987இல் காரைதீவில் 43 முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர்.

1987 ஏப்ரலில் கிண்ணியாவில் 35 முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர்.

1987 ஒக்டோபரில் மூதூரில் 52 முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர்.

1989 சம்மாந்துறைப் பள்ளிவாயலில் 21 முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர்.

26.04.1985 - 27.06.2002 வரை வாழைச்சேனையில் 67 முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர்.

31.12.1987 இல் காத்தான்குடியில் 67 முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர்.

12.07.1990இல் காத்தான்குடியில் 168 முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர்.

03.08.1990இல் 147 முஸ்லிம்கள் காத்தான்குடி பள்ளிவாயலில் கொல்லப்பட்டனர்.

07.07.1990இல் அக்கரைப்பற்றில் 58 முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர்.

30.07.1990இல் அக்கரைப்பற்றில் 14 முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர்.

17.11.1989இல் 13முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர்.

1990 ஆகஸ்டில் ஆலிம் நகரில் 19 முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர்.

10.08.1990 ஏறாவூரில் 126 முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர்.

1990 மே மாதம் அட்டாளைச்சேனையில் 15 முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர்.

01.09.1992இல் 23 முஸ்லிம்கள் சாய்ந்தமருதில் கொல்லப்பட்டனர்.

15.10.1992இல் அக்பர்புரம் பள்ளித்திடலில் 237 முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர்.

1990 ஜூன் கல்முனை, அக்கரைப்பற்று, பொத்துவிலில் 200 முஸ்லிம் பொலிஸார் கொல்லப்பட்டனர்.

1990.08.06இல் 33 முஸ்லிம்கள் (விவசாயிகள்) அம்பாறையில் கொல்லப்பட்டனர்.

1990 ஜூனில் 186 முஸ்லிம் பொலிஸார் கொல்லப்பட்டனர்.

29.04.1992 இல் அழிஞ்சிப்பொத்தானையில் 147 முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர்.

27.06.1991இல் பொத்துவிலில் 30 முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர்.

இதுபோன்ற இன்னும் பல முஸ்லிம்கள் மீது காட்டப்பட்ட பாஸிஸ காட்டுத்தார்பார் சம்பவங்களும் உள்ளன.

மேலதிக விபரங்களுக்கு முஸ்லிம் ஆவணக்காப்பகத்தை நாடவும்.

காத்தான்குடி ஏறாவூர் படு கொலைகள் 15 ஆவது நிறைவும் துயர நினைவுகளும்.....

காத்தான்குடி ஏறாவூர் படு கொலைகள் நமது அடிமனதில் ஆழமான வடுக்களைப் பதித்துள்ளன. இக்கோர சம்பவங்கள் நிகழ்ந்து இம்மாதத்தோடு பதினைந்து வருடங்கள் நிறைவ பெறுகின்றன. துயர்மிகுந்த இந்த பதினைந்த வருடங்களும் முஸ்லிம்களது வரலாற்றில் பயங்கரம் நிறைந்த காலகட்டங்களாகவே இருந்து வந்துள்ளன. 90 களின் ஆரம்பப்பகதியினது கண்ணீரும் இரத்தமும் மனதைத் துயர அலைகளால் கழுவுகின்றன.

03-08-1990 அன்று காத்தான்குடி ஹுஸைனியா தைக்கா, மீரா ஜும்மா பள்ளி வாயல் அகியவற்றில் தமிழ் புலிகளின் ஆயுதம் தாங்கிய கும்பலொன்று நுழைந்து பள்ளிவாயல்களின் அனைத்துப் பக்கங்களையும் சுற்றி வளைத்து அப்பொழுது இஸாத் தொழுகை நடை பெற்றுக் கொண்டிருந்தது. தொழுது கொண்டிருக்கும்போதே மிலேச்சத்தனமான இத்தாக்குதல் நடை பெற்றது. இதில் சிறுவர்கள் வயோதிபர்கள் உட்பட 103 பேர் கொல்லப் பட்டதோடு 80 பேர் அளவில் படுகாயமுற்றனர். புனித ஸ்தலமொன்றில் இறைவழிபாட்டில் ஈடுபட்டிருக்கும் வேளையில் எப்படி இந்த அப்பாவி மக்களைக் கொல்ல அவ் ஈனர்களுக்கு மனது வந்தது.

காத்தான்குடிச் சம்பவம் நிகழ்நத ஒரு வாரத்தின் பின் 11-08-1990 அன்று இரவு ஏறாவூரில் தாய்மார்கள், பச்சிளம் பாலகர்கள், வயோதிபர்கள் உட்பட 116 பேர் படு கொலை செய்யப்பட்டனர்.எங்கும் இரத்த வெள்ளம் ஒரே மரண ஓலம் ஒருவர் பின் ஒருவராய் உயிர் விட்ட கொடுரக் காட்சி மனதை உருக்குவதாகும்.

பிறந்து 7 நாட்கள் மட்டுமேயான பச்சிளம் பாலகன் ஒருவனது உயிரைக்கூடப் பறித்ததையும் ஒரு தாயின் கற்பம் கிழிக்கப்பட்டு சிசு வெளியே எடுத்து வதைக்கப்பட்ட ஈனச் செயலையும் யாரிடம் சொல்லி அழுவது..?

ஊருக்குள் கொள்ளையர்களும் ஆயுதம் தாங்கியோரும் நுழைந்திருக்கிறார்கள் பொதுமக்கள் அனைவரும் பாதுகாப்புக்காக

பள்ளிக்கு வாருங்கள்

என பள்ளிவாயல் ஒலிபெருக்கியில் அறிவிக்கப்பட்டது. கலவரமடைந்த மக்கள் தத்தம் வீடுகளிருந்து வெளியேறி பள்ளிக்குச் செல்ல முற்பட்டபோது ஏற்கனவே தாக்குதலுக்குத் தயாராக மறைந்திருந்த புலிகள் அவர்களை சுட்டும் வெட்டியும் கொன்றனர். தப்பியோட முனைந்தவர்களும் தாக்கப்பட்டனர்.

ஏறாவூர் படுகொலையை மேற் கொண்ட புலிகளின் தாக்குதல் அணியில் முஸ்லிம் உறுப்பினர்களும் இருந்துள்ளனர் என்பது பேரதிர்ச்சியைத் தருகின்றது. தமது சொந்த சமூகத்தினைக் கொல்வதற்கு உடந்தையாக இருந்த இவர்களை அல்லாஹ் எப்படி மன்னிப்பான்.?

ஒவ்வொர வருடமும் இச்சம்பவங்கள் தவறாமல் நினைவு கூரப்பட்டு வருகின்றன. எனினும் முறையான ஆவனப் பதிவுகளோ, இலக்கியச் சான்றுகளோ இதுவரை வெளிக் கொணரப்படாமை வேதனைக்குரியதாகும்.

இப்படுகொலைகளின் பின்புல சக்திகள் யார் என்பது தொடர்பாக சிலர் சந்தேகம் எழுப்பி வருகின்றனர். புலிகள் இதனைச் செய்யவில்லை என நிறுவ முற்படுவதே அவர்களது கபட நோக்கமாகும்.

ரஞ்சித் அப்பா என்றழைக்கப்படும் நாகராசா, நியூட்டன், கரிகாலன் ஆகியோர் அடங்கிய குழுவொன்றே காத்தான்குடியிலும், ஏறாவூரிலும் இத்தாக் குதல்களை நடாத்தியது. காத்தான்குடிப் படு கொலைக்கும் தமக்கும் எவ்விதத் தொடர்புமில்லை யெனப் புலிகளின் அரசியல் கட்சியான விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி மறுப்பறிக்கை யொன்றை விட்டிருந்தது.







அவ்வறிக்கை யில் தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்குமி டையே இனக்கலவரத்தைத் தூண்டிவிட சிறீலங்கா ராணுவம் சில ஆயுதக் குழுக்களை திட்டமிட்டுப் பயன்படுத்தி வருகின்றது. சிறீலங்கா அரசின் சதிவேலைகள் தொடர்பாக விழிப்பாக இருக்கும்படி முஸ்லிம் மக்களையும் தமிழ் மக்களையும் கேட்டுக் கொள்கிறோம் என்று தெரிவிக்கப் பட்டிருந்தது.

புலிகளின் மறுப்புக்கு காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம் 05-08-1990 இல் மறுப்பறிக்கை யொன்றை

வெளியிட்டிருந்தது. அதில் 04 ஆம் திகதிய பீ.பீ.சி தமிழ் ஒலிபரப்பில் விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு அரசியல் பொறுப்பாளர் திரு.கரிகாலன் இச்சம்பவத்தில் நாங்கள் சம்பந்தப்படவில்லை என மறுப்பறிக்கை விட்டதனைக் கேட்டு நாங்கள் மிக வேதனையடைந்தோம். இந்த பயங்கரவாதிகள் ஈனத்தனமான செயல்களில் மாத்திரமல்ல படு பொய்யான பிரச்சாரத்தின் மூலமாக உலகத்தின் கண்களில் மண்ணைத் தூவுவதிலும் கெட்டிக்காரர்கள் என்பது இதனால் நிருபிக்கப்பட்டுள்ளது. எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கை மேலும் தெரிவிக்கையில் புலிப் பயங்கரவாதிகளின் குழு ரஞ்சித் அப்பா என்றழைக்கப்படும் நாகராசாவின் தலைமையில் வந்தே இந்தத் தாக்குதலை நடத்தியது. இந்த ரஞ்சித் அப்பாவை காத்தான்குடி மக்கள் மிக நன்றாக அறிவார்கள். பள்ளிவாயல் சம்பவத்தில் தெய்வாதீனமாக உயிர்தப்பிய சிலர் நேரடியாக ரஞ்சித் அப்பாவை கண்டிருக்கிறார்கள். இதில் எள்ளளவும் சந்தேகம் கொள்வதற்கு

இடமில்லை. இதனை எந்த இடத்திலும் நிருபிப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம எனக் குறிப்பிடப் பட்டுள்ளது.

காத்தான்குடிப் படுகொலையைத் தொடர்ந்து முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஸ்ரபின் கொழும்பு இல்லத்தில் தமிழ்க் கட்சிகளுடனான கூட்டமொன்று நடைபெற்றது. அக்கூட்டத்தில் காத்தான்குடிப் படுகொலைக்கு புலிகளே காரணம் எனக் குறிப்பிடும் அறிக்கையொன்றில் கைச்சாத்திடுமாறு அஸ்ரப் தமிழ்க் கட்சிகளை வேண்டினார். அக்கட்சிகளெல்லாம் அதில் கையொப்பமிடாது நயவஞ்சகத் தனமாகவே நடந்து கொண்டன. ஈ.பி.ஆர்.எல.எப். ரெலோ - ஈ.என்.டி.எல்.எப். - தமிழ்க் காங்கிரஸ், தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகள் அங்கு சமூகமளித்திருந்த போதிலும் சாக்குப் போக்குகளைச் சொல்லி அவர்கள் நழுவி விட்டனர்.



அங்கிருந்த தமிழ் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் இக்கொலைகள் நடைபெற்ற பகுதி அரச படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதியாகும். அப்படியிருக்கையில் விடுதலைப் புலிகள்தான் இதனைச் செய்தனர் என்று எந்த ஆதாரத்தின் அடிப்படையில் கூறுகின்றீர்கள்.? என்று கேட்டார். அதற்கு கரிகாலன் நியூட்டன் ரஞ்சித் அப்பா போன்ற புலிகள் இயக்கத்தின் முக்கியஸ்தர்கள் தாக்குதல்களின் போது இருந்ததை மக்கள் கண்டுள்ளனர் என அஸ்ரப் பதிலளித்தார். இருட்டான நேரத்தில் அவ்வளவு தெளிவாக இனம் கண்டது எப்படி.? என குமார் பொன்னம்பலம் விதண்டாவாதம் கேட்டார். இவ்வாறு தமிழ்த் தலைவர்கள் நடந்து கொண்டதால் அக்கூட்டம் உருப்படியான முடிவுகளெதையும் எடுக்காது கலைந்து சென்றது.

எங்கே அந்த டாக்டர்?

அன்றைய பொழுதின்
இறுதித் தொழுகை
அவர்களைப் பொறுத்த வரை
இறுதித் தொழுகையாகவே
அமைந்து விட்டது.

எத்தனை பேருக்கு
அந்தப் பாகியம் கிடைக்கும்.
இறைவனோடு
உரையாடிக் கொண்டிருக்கும் போதே
உயிரை விடுவதற்கு

சந்தேகமே யில்லை
முதுகுக்குப் பின்னால் நடத்தப்பட்டது
கோழைத் தனமான தாக்குதல்தான்.
ஆனாலும்
அவர்களுக்குக் கிடைத்திருப்பதோ
வீர மரணம்தான்.

உதவிக்கு வாருங்கள்
உயிர்களைக் காப்பாற்ற
ஓடி வாருங்கள்
ஊரோடு சேர்ந்து
ஒப்பாரி வைத்தன
ஒலி பெருக்கிகள்.

முதலுதவிக்காய் எல்லோரும்
முண்டியடித்துக் கொண்டு
ஒன்று சேர்கையில்
அந்த டொக்டரை மட்டும்
அறவே காணவில்லை.

ஊரில் தானே இருக்கிறார்.
ஓடி வந்தால் என்னவாம்.?
குறை பட்டுக் கொண்டது
ஒரு குரல்

ஓசிக்கெல்லாம் வரமாட்டார்
காசிக்குத்தான் வருவாராக்கும்
கிண்டலடித்தது

ஒரு கிழட்டுக் குரல்
வீட்டிலும் காணவில்லை
ரோட்டிலும் காணவில்லை
உயிருக்குப் பயந்து
ஒளிந்து கொண்டாரோ என்னவோ..?

ஊகித்ததைதச் சொல்ல
உதடுகளைத் திறந்தது
ஒரு குரல்

என்ன மனிசன் அவன்
இல்லை இல்லை
மனிசனே இல்லை அவன்
வெறுப்பைத் தடவிக் கொண்டு
வெளி வந்தது வேறொருகுரல்.

விமர்சனங்கள் இப்படி
விஸ்வருபம் எடுதாததாலும்
கடைசி வரை அவரை
களத்தில் காணவேயில்லை.

எரிமலை சிதிலங்களாய்
சிதறிக் கிடந்த ஜனாஸாக்களை
சேமித்துக் கொண்டிருக்கையில்
அடையாளம் காணப் பட்டது
அந்த ஜனாஸாவை

ஆம்
நெஞ்சார இஸ்லாத்தை நேசித்து
கலிமாத் தோட்டத்துக்குள் வந்து
கைகுலுக்கிக் கொண்ட
எங்கள்
அன்வர் டாக்டரின்
அழகிய ஜனாஸாதான் அது.....

- மௌலவி.MIM.ஸுபைர்.

இந்த கவிதையில் குறிப்பிடப்பட்ட (கலிமாத் தோட்டத்துக்குள் வந்து கைகுலுக்கிக் கொண்ட) டாக்டர் அன்வர் அவர்கள் மீராபள்ளிவாயலில் நடத்தப்பட்ட தாக்குதலில் சஹீதாக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது....

காத்தான்குடி ஏறாவூர் படு கொலைகள் நரவேட்டைக்கு வயது பதினைந்து

காத்தான்குடிப் பள்ளியின் கோர இரவுகள்:
வழமைபோல் பாங்கொலி கேட்டு இறையில்லம் நோக்கி சிறுவர்களும், இளைஞர்களும், ஆண்களும் வயோதிபர்களுமாக விரைகின்றனர். இறைவனைத் தொழுகின்றனர். வாகனத்தில் வெறிபிடித்த ஒரு கூட்டம் வருகின்றது. பள்ளியின் கதவுகள் சாத்தப்படுகின்றன. தொழவந்தவர்கள் அமைதியாக தொழுது கொண்டிருக்கும் போது ஏ கே 47, எல் எம் ஜி இரண்டும் பேசத் தொடங்குகின்றன. இடையிடையே கிரனைட்டுகளும் வெடிக்க வைக்கப்படுகின்றன. சிறுவர்கள் மடிகிறார்கள், முதியவர்கள் சரிகிறார்கள், இளைஞர்கள் நிலைகுலைந்து விழுகிறார்கள் இதுவரை தண்ணீரால் கழுவப்பட்ட மசூதி கண்ணீராலும், இரத்தத்தாலும் குளிப்பாட்டப்படுகிறது.

இச்சம்பவம் மீரா ஜும்ஆ பள்ளியிலும், ஹுஸைனியா தைக்காவிலுமே இடம்பெற்றது. ஹுஸைனியா தைக்காவில் மொத்தம் 55 பேர் தொழுதார்கள். அதில் 37 பேர் களத்தில் மரணமாகினர். 11 பேர் படுகாயமுற்றனர். ஏனையோர் தறிகெட்டு ஓடித் தப்பினர். இரு பள்ளியையும் சேர்த்து 103 பேர் காவு கொள்ளப்பட்டனர். நூற்றுக்கு அதிகமானோர் உறுப்புக்கள் இழந்து நடைப்பிணங்களாகினர்.

கொல்லப்பட்டோரில் 6 பேர் ஆசிரியர்கள், 02 பேர் மார்க்க அறிஞர்கள்., ஒருவர் குர்ஆனை மனனமிட்ட ஹாபிழ், 06 பேர் புனித ஹஜ் செய்த ஹாஜிகள், ஒருவர் தொழுகைக்காக அழைப்பு விடுக்கும் முஅத்தின். அல்லாஹ்வின் பெயர் கூறும் இவர் வாயில் துப்பாக்கி தன் பெயரை எழுதியிருந்தது. 20 வயதிற்குட்பட்டோர் 44 பேர். நாற்பது வயதிற்குட்பட்டோர் 28 பேர் நாற்பதிற்குமேற்பட்டோர் 31 பேர். 50 பேர் திருமணம் முடிக்காதவர்கள். 53 பேர் திருமணம் முடித்தவர்கள்.

உண்மையில் இந்நிகழ்வு பாரிய பின் விளைவுகளைத் தோற்று வித்திருக்கின்றன. திருமணம் முடித்த பெண்கள் விதவையாக்கப்பட்டனர். முடிக்காதோர் அனாதையாக்கப்பட்டனர். இது தொடர்பான ஒரு கணீப்பீடு வருமாறு-

பெயர் - செயினத் உம்மா- எனது கணவர் கூலித் தொழில் செய்து எங்களைக் காத்து வந்தார் ஆடம்பரமாக வாழா விட்டாலும், கஸ்டம் இல்லாது சந்தோசமாக வாழ்ந்து வந்தோம். திடீரென்று அன்றிரவு வெடிச்சத்தம் கேட்டது. பயந்து போய் எனது பிள்ளையைத் தூக்கிக் கொண்டு ஓடிப்போய் ஒரு காட்டுக்குள் படுத்துக் கொண்டேன். இந்த நேரம் எனது கணவர் பள்ளிக்குச் சென்றிருந்தார். என்கணவரும் சுடப்பட்டார் என்பதை அறிந்து நான் பட்ட வேதனை சொல்ல முடியாது.

இப்போது வறுமையில் வாழ்கிறேன். என்வீடு ஒருபக்கம் ஒழுகிக் கரைகிறது. வருமானத்திற்கு வழியில்லாது தவிக்கிறேன். கூலி வேலை செய்தே

என்பிள்ளையை வளர்த்தேன். இப்போது என்னால் உழைக்க முடியாது. ஒரே தலைவலி. குனிய முடியாது. ஏதாவது உழைத்தாலும் மருந்துக்கே செலவாகி விடுகிறது. இதனால் என் பிள்ளையின் படிப்பை நிறுத்திவிட்டேன். அவன் ஏதாவது கொண்டுவந்தால் உண்போம். இல்லாவிட்டால் தண்ணீர்தான். ஆரம்பத்தில் சிலர் உதவினர். இப்போது யாரும் எட்டிக்கூடப் பார்ப்பதில்லை.

இது விதவைத் தாயின் கதை இப்படி பல தாய்மார்கள் கஸ்டப்படுகின்றனர். பல மாணவர்களின் படிப்பு பாதியில் நின்றிருக்கிறது. தந்தையின் கட்டுப்பாடில்லாத பிள்ளையின் உளவியல் பாதிப்படைந்திருக்கின்றது. ஆரம்பத்தில் உதவியவர்களை இப்போது காணவில்லை.

அடுத்தவர்- பெயர் குறிப்பிடவில்லை. எனது கணவர் பெயர் எம். என். முஹம்மது பரீட். இருக்கும்போது நல்ல முறையில் வைத்திருந்தார். இப்போது கஸ்டப்படுகிறேன். இரு பிள்ளைகள் இருக்கின்றனர். மகளுக்கு வாப்பாவைத் தெரியாது. எனக்கு சிறுவயதிலேயே திருமணமாகிவிட்டது. இப்போது விதவையாகவே வாழ்கிறேன். காத்தான்குடியில் இப்பிரச்சினையால் 81 விதவைகள் உள்ளனர். வெளிப்படையாக பார்க்கின்ற போது நாங்கள் சந்தோசமாக வாழ்வதாக எண்ணுகின்றனர். ஆனால் நாங்கள் அழுவது இறைவனுக்குத்தான் தெரியும். புணர்வாழ்வு கழகம் 7000.00 ரூபா கைத்தொழில் செய்வதற்காக தந்தது. கோழி வாங்கி வளர்த்தேன் எனது கஸ்ட்காலம் கோழியெல்லாம் நோயால் செத்து விட்டது. அப்பணத்தை மாதாந்தம் கட்டவேண்டியுள்ளது. இல்லாவிட்டால் வட்டியையும் சேர்த்து கட்டவேண்டியுள்ளது. ஏன் அப்பணத்தை கடனாகப் பெற்றேன் என்று இப்போது யோசிக்கிறேன். எங்கள் கதையையும், சம்பவங்களையும் காட்டிப் பலர் பணம் பெற்றிருக்கின்றனர். எங்களுக்கு ஐந்து சதமும் தரவில்லை. அல்லாஹ்வின் தண்டனைதான் அவர்களுக்கு கிடைக்கும்.

வீடு எரியும் போது குளிர்காயும் கூட்டம் எல்லா சமூகத்திலும் இருக்கின்றன. யாரோ பலியாக யாரோ புதையல் பெறுகின்றனர். ஏறாவூர் சம்பவத்தின் போது எடுக்கப்பட்ட படங்களையும் ஒருவர் விலையாகக் கேட்டிருக்கிறார். பலர் இதனைக்காட்டி நோர்வே போன்ற நாடுகளுக்குச் சென்றிருக்கின்றனர்.

ஏறாவூர் படு கொலை ரத்தக் கறைபடிந்த வரலாறு.....

இதே மாதம் ஆகஸ்ட் 12 ஆம் திகதி 1990 இல் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெற்ற மற்றுமொரு நரவேட்டை ஏறாவூர்ப் படு கொலையாகும். வழமைபோலவே மக்கள் உறங்கிக் கொண்டிருந்தனர். இரவு 10.00 மணியிருக்கும் புலிகளின் மனிதவேட்டை ஆரம்பமாகியது. முதலாவது வீட்டில் உறங்கிக் கொண்டிருந்தவர்கள் எழுப்பப்பட்டு நஞ்சூட்டப்பட்ட கத்திமுனைகளால் குத்தப்படுகின்றனர். எழும்ப மறுத்தவர்கள் சுடப்படுகின்றனர். ஒரே கூரையின் கீழ் தூங்கிய பச்சிளம் குழந்தை முதல் வயது முதிர்ந்தவர்கள் வரை எந்த வேறுபாடுகளுமின்றி கொன்று குவிக்கப்பட்டனர். 121 பேர்களின் உயிர்கள் ஒரே இரவில் சில மணித்தியாலங்களுக்குள் பதைக்கப் பதைக்க கொல்லப்பட்ட ஒரு வரலாற்றுத்துத் துரோகம் நடந்தேறுகிறது.

ஏறாவூர் மக்கள் இப்படியொரு சம்பவத்தை கனவிலும் நினைதுப் பார்க்கவில்லை. போராளி களுக்கும் ஏறாவூர் முஸ்லிம்களுக்கும் அப்படியொரு நேசம் அப்போது இருந்தது. 1987 ஆம் ஆண்டு இந்திய இராணுவம் இலங்கைக்கு வந்து புலிகளை எதிர்த்துப் போரிட்ட சமயம் ஏறாவூர் முஸ்லிம்கள் தங்கள் பால் பாத்திரத்தினுள் உணவுப் பொருட்களைக் கொண்டு சென்று புலிகளுக்கு உதவியிருக்கிறார்கள் இதனால்தான் பொட்டம்மான், யோனி போன்றோர் ஏறாவூர் வந்த சமயம் எமது உடலில் ஓடும் இரத்தம் ஏறாவூர் மக்கள் தந்த உணவின் ரத்தம் நாம் இதனை உயிருள்ளவரை மறக்கமடாட்டோம் என்று பேசிச் சென்றனர். இவ்வாறு பேசிய சில மாதங்களுக்குள் ஏறாவூரில் இரத்த ஆறு ஓடியது.

இவ்வாறே 90 மேயில் ஐ பி கே எப் வெளியேறிய பின்னர் மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்களின் முக்கியஸ்தர்கள் பலரைப் புலிகள் காட்டினுள் அழைத்துச் சென்று பெரிய விருந்து தொன்றினை வழங்கியதனை ஏறாவூர் மக்கள் மறக்கவில்லை. ஆனால் அவ்விருந்தில் கலந்து கொண்ட யூ ஐ தாவூத் என்ற கல்விமான் 1990 ஜூலை 13 ஆம் திகதி புலிகளால் கடத்தப்பட்டு சரியாக 40 நாட்களின்பின் 12-08-1990 இல் ஏறாவூர் சதாம் ஹுஸைன் கிராமப் படுகொலை அரங்கேறியது.

மீராகேணி, ஐயங்கேணி, ஏறர்வூர் 03-06 சதாம் ஹுஸைன் கிராமம் போன்ற பகுதிகளில் நடைபெற்ற இச்சம்பவமும் பாரிய பின்விளைவுகளை தோற்றுவித்திருக்கின்றன. அதில் சம்பந்தப்பட்ட சில குடும்பங்கள் இதோ.



எஸ் எல் எம் நழீம்.

இந்நிகழ்ச்சியின் போது தாய், தந்தை உட்பட எனது குடும்பமே பலியானது. எனது தந்தைக்கு இரவு 10.00 மணியளவில் வெடி வைக்கப்பட்டது எனினும் காலை 5.30 மணியளவிலேயே அவர் மரணித்தார். அதுவரை துடித்துக் கொண்டிருந்தார். என்தாயின் தோளில் என்தம்பி இருந்தான். அப்போது அவனுக்கு ஒன்றரை வயது. தாய்க்கு வெடி பட்டதும் மரணித்துவிட்டார். தம்பி தப்பி விட்டார். இந்நேரம் என்மாமா ஓடிவந்திருக்கிறார். அவருக்கு வெடி பட்டதும் அவர் மரணிக்கும்போது அவருக்கு 5 பெண்பிள்ளைகளும், ஒரு ஆண்பிள்ளையும் இருந்தனர். குறிப்பிட்ட சமயம் நான் வெளியே சென்றிருந்தேன் அதனால் தப்பி விட்டேன்.



என்னையும் என்தம்பியையும் என் பெரியம்மா வளர்த்தார். விஞ்ஞானம் படிப்பித்தார். நான் கெட்டித்தனமாக படித்தேன். ஒரு டொக்டர் ஆவேன் என எல்லோரும் நம்பினர் எனினும் தாய் தந்தை கட்டுப்பாடில்லாது வளர்ந்ததால் என் நடவடிக்கைகள் மாறுபட்டு விட்டன. ஆனால் பரீட்சை எடுக்க முடியவில்லை. கனவுகளெல்லாம் வீணாகிவிட்டன.

நெல்லறுவடை செய்வதற்கான ஏற்பாடுகளையெல்லாம் செய்து விட்டு அதற்குரிய பணத்தையெல்லாம் ஒருவரிடம் வாங்கிக் கொடுத்துவிட்டு தந்தை தூங்கினார். இச்சம்பவம் நடந்ததால் யாரும் வயல்பக்கம் போகவில்லை. காரணம் அவ்வயல் தமிழர் எல்லைக்குள் இருக்கின்றது. இதனால் இருந்த வீட்டை பணம் வாங்கியவரிடம் இழந்தோம்.

இதேபோல் இன்னொரு குடும்பத்தின் கணவர் கொல்லப்பட்டதால் குடும்ப கஸ்டங்கள் காரணமாக மனைவி வெளிநாட்டுக்கு தொழிலுக்காகப் போனார். விரைவில் திரும்பி மறுமணம் முடித்தார். இப்போது பிள்ளைகள் அலைகின்றன.

காத்தான்குடி பாதிக்கப்பட்ட போது அவர்கள் பொருளாதாரம் வியாபாரத்தில் தங்கியிருந்ததால் ஊரவர்களின் வருமானத்தில் மண்விழவில்லை. அதே போல் ஓட்டமாவடி, வாழைச்சேனை, மீராவோடை என்பன ஓரளவு விவசாயத்திலும், கடலிலும் தங்கியிருந்ததால் ஓரளவு ஈடுசெய்ய முடிந்தது. ஏறாவூரைப் பொறுத்த வரை அவர்கள் காணிகள் முற்றாக தமிழ் எல்லைப் பகுதியிலேயே அமைந்துள்ளன. இதனால் அங்கே செல்ல முடியாது தவிக்கின்றனர். இதனால் சுமார் 10500 ஏக்கர் விவசாய நிலங்கள் பயிர் செய்ய முடியாதுள்ளன. 30000 கால் நடைகளையும் அவற்றின் வருமானங்களையும் இழந்துள்ளனர். 1990ன் பின் உறுகாமம் என்னும் கிராமத்தையும் இழந்துள்ளனர். அதே போல் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள குருக்கள் மடம் என்னும் இடத்தில் புனித ஹஜ் யாத்திரையை முடித்துக் கொண்டு வந்த ஹாஜிகள் உட்பட 250 க்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

பொலனறுவை மாவட்டத்தின் பல எல்லைக் கிராமங்களிலும் படுகொலைகள் இடம் பெற்றன.

1992.04.29 அன்று அழிஞ்சிப்பொத்தானை என்னும் எல்லைக் கிராமம் கொலை வெறியர்களால் தாக்கப்பட்டது. இதில் சுமார் 150 முஸ்லீம் அப்பாவிப் பொது மக்கள் கொல்லப்பட்டனர். ஐ.எம்.அசனார் (அதிபர்) என்பவரின் சொந்தக்

குடும்பத்தைச் சேர்ந்த 12 பேர் (அவரைத் தவிர மற்ற எல்லோரும்) அவரது வீட்டில் வைத்து வெட்டிக் கொல்லப்பட்டனர்.

1992.10.15ம் திகதியன்று பொலனறுவை மாவட்டத்தின் எல்லைக் கிராமமான பள்ளியாக்கொடல்ல, பங்குறான, அஹமதாபுறம் என்ற இடங்களில் 290 முஸ்லீம் அப்பாவிப் பொதுமக்கள் வெட்டியும், சுட்டும் படுகொலை செய்யப்பட்டனர். இப்படுகொலைகளைத் தொடர்ந்து இப்பகுதியிலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் தம்பாளை, சுங்காவில், அத்துக்கல ஆகிய இடங்களில் இன்னும் மறக்கப்பட்ட அகதிகளாகவே வாழ்ந்து வருகின்றனர்.

இலங்கையில் பல்வேறு இடங்களில் இத்தகைய நரமாமிச வேட்டைகள் நிகழ்த்தப்பட்ட போதும் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடந்த இசசம்பவங்களே அனர்த்தம் கூடியவைகளாகும். 1990 இல் நடந்த இத்தகைய சம்பவங்களால் மட்டக்களப்பு மாவட்ட முஸ்லீம்கள் பல்லாயிரக்கணக்கான நெற் காணிகளையும் இருநூறுவில், உறுகாமம், சங்கத்துக்கொலனி, பள்ளியாக்கொடல, பங்குறான, கள்ளிச்சை போன்ற பல கிராமங்களையும், பெருந்தொகையான கால் நடை, வாகனங்கள் ஆஸ்த்தி அத்திவாரங்களையும் இழந்துள்ளனர். கல்வி வளர்ச்சியில் பாரிய பின்னடைவு ஏற்பட்டுள்ளது. சட ரீதியான இவ்விழப்புக்கள் போக உணர்வு ரீதியான இழப்புக்கள் ஈடு செய்ய முடியாதவை. வார்த்தைகளால் வளைத்துப்போட முடியாதவை, ஒவ்வொரு உயிரும் அதனை உய்க்கும் போதே உணரும்.

எத்தனை குழந்தைகள் ? எத்தனை கர்ப்பிணிகள், எத்தனை இளைஞர்கள், யுவதிகள்? எத்தனை முதியோர்கள் அத்தனை பேரும் கருகினரே! வேண்டாம் இனி ஒரு தடவையும் வேண்டாம்.

நீங்கள் மறந்த நாள்

உலகத்தை விட்டுத்தான்
அவர்களை
மறைத்துப் போட்டார்கள்
உங்கள்
உள்ளத்தை விட்டுமா?

அன்று
அந்த வானம் குழறிக்
குழறிக் கூறியதே
இந்த குரூரச் செயலை
மறந்துவிடாதீர்கள் என்று

சொர்க்கத்தின் விலாசத்தை
சொல்லிச் சென்றார்களே
அந்த ஜீவன்கள்

உங்கள் ஒருவருக்காவது
நினைவிருக்கின்றதா?
அந்தப் புனித பாதை

இத்தா வேலி கட்டக் கூட
ஒரு ஆடவனின்றி
இரவோடு இரவாய் வேலிகட்டி
இருண்டு கிடந்தார்களே!
உம்மாவும் மகளும்
இந்தச் சேதியாவது
உனது நினைவில்

அன்று
அவர்களின்
சிதறிய உடல்களும்

சிந்திய ரத்தமும்
எமக்கு
சுதந்திரத்தையன்றோ
தேடித்தந்தது!

இதனால்
அவர்களை நீங்கள்
மறந்திருப்பீர்கள்
ஆக்ரோஷங்களும்
ஆர்ப்பாட்டங்களும்
ஆறித்தான் போயினவே
சுகந்தக்காற்றை
சுவாசித்ததனாலா?
நினைவிருக்கிறதா?
அந்த நாள்....

இரத்தத்தில் தோய்ந்த
இருண்ட நாள்
நீங்கள்
மறந்திருப்பீர்கள்!

நீங்கள் மறந்த நாள்
நினைவிருக்கின்றதா?
03.08.90
அந்த நாள் ...
அந்த
மங்கிய பொழுதை
மண்ணிலே புதைத்த நாள்

முதுகுக்குப் பின்னால்
துப்பாக்கியைத் தூக்கிய
கோழைகளின்
இரக்கமற்ற
அந்த
இறந்த நாள் ...

ஒவ்வொரு ஷுஹதாக்களையும்
சோகம்,
சொல்லிச் சொல்லி
அழுத நாள்...

அதான்கள்
அழைப்பை மட்டுந்தான்
சொல்லும் என்று
நினைத்திருந்தோம்
அது,
அக்கினிச் செய்தியையும்
அள்ளி வந்த போதுதான்
நாம் நினைத்தது
பிழைத்துப் போனது.

ஒவ்வொரு ரவைகளும்
ரத்தக் கண்ணீர் வடித்ததே
இவர்களையா
நாம்
இறக்கச் செய்தோம்?

பத்து வயது கூட நிரம்பாத
எஞ்சி நின்றதே
கேட்டுப்பார் அந்த சோகத்தை
சுவாசப்பை வெடித்துச் சிதறும்

உங்களுக்கு
மறந்து போயிருக்கும்
அந்த இழப்பு
எமக்கு வரவில்லையே என்ற....

கல்லும் அன்று
கரைந்து போயிருக்குமே!
இந்த
கலவரச் செய்தியை
அதன் காதுகள்
கேட்டிருக்குமாயின்.

பால்மணம் மாறாத
பிஞ்சு உடலை
வாய்க்குள்ளே வெடிவைத்து
வாழ்வைக் கட்டையாக்கினார்களே,
காடையர்கள்
விசாரித்துப்பார்
ரத்தம் கொதிக்கும்
நாளம் வெடிக்கும்
தேகம் துண்டு துண்டாய்ப் போகும்..

நோக்கம் ஒன்றுதான்
அது சுவர்க்கம்
அதில்

ஆறில் நுழைந்தாலென்ன?
அறுபதில் நுழைந்தாலென்ன?

கவிதையாக்கம்:
அன்வர் சேர்
அல்-ஹிறா வித்தியாலயம்,
காத்தான்குடி.

இரத்த ராத்திரி

இரத்த ராத்திரி.....

இன்னும்
இறந்து விடவில்லை
அந்த
இழப்புச் செய்திகள்.
ஒரு கணம் நம்-
உதிரத்தை
உறைய வைத்த
அந்த-
இரத்த ராத்திரி.

இரவின்
இறுதித் தொழுகை
அவர்களுக்கு-
இறுதித் தொழுகையாகவே
இருந்து விட்டது.

படைத்தவனுக்காய்
தங்கள்
உணர்வுகளை மட்டுமல்ல
உடல், உணர்வு
அத்தனையையும்
அர்ப்பணித்த அந்த
இரத்த ராத்திரி.

காத்தான்குடியின்
இரண்டு பள்ளிக்குள்
இறைவனை வணங்குதற்காய்
தங்கள்
தலைகளைத் தாழ்த்திய
போது
முதுகுக்குப் பின்னால்
முட்டாள் தனமாக
ஒரு கூட்டம்
சுட்டுத்தள்ளியது.
அதுதான்
ஒரு இரவை ஈரமாக்கிய
இரத்த ராத்திரி....

ஏறாவூரிலும்
கொலைகாரக்
கும்பலொன்று
சின்னவர் பெரியவர்
ஆண்கள் பெண்கள்
பேதமில்லாமல்
சுட்டும், வெட்டியும்
தங்கள்
நர வேட்டையை
நடத்தி முடித்தது.

என்ன செய்தன
இந்த-
ஈரக் குழந்தைகள்..?
கர்ப்பிணியின் வயிற்றை
கத்தி முனையால்
குத்திக் கிழித்து
குதறித் துப்பின
அந்தக்
கொடூர நாய்கள்.

இப்படித்தான்
ஹஜ்ஜுக்குச் சென்று வந்த
ஹாஜிகளையும்.....
கடலுக்கு ஆற்றுக்கு
தொழிலுக்கு...
என-
சென்றவர்களையெல்லாம்
கொன்று குவித்தன
ஒரு-
கொலைகாரக் கும்பல்.
அப்போது - அது
இலையுதிர் காலமல்ல...
ஒரு கும்பலின்
கொலையுதிர்காலம்.
உம்மா!
என்னைக் கொஞ்சும்
போக விடுங்கள்.....!

கவிஞர்: மதியன்பன்.

எவ்வளவு பயங்கரமான கொலைக் கலாச்சாரத்திற்கு நாம் முகம் கொடுத்து வருகிறோம் என்பதை நினைத்துப்பார்க்கும் போது கண்கள் பனிக்கின்றன. அல்லாஹ் அநியாயக்காரர்களை ஒருபோதும் விட்டுவைப்பதில்லை எதிர்வரும் காலங்களிலும் இவ்வாறான நிகழ்வுகள் இடம்பெறாது நம்மைக் காப்பதற்கு அவனே போதுமானவன்.

concept, typeset & printing: Mathy media world - Kattankudy.
0773236046, 0777291766.